**STARTING TIME 11.07 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 11/2025**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff solemnly affirmed by Tr. R. Suresh Babu, Grade-III Bench Clerk of this court, on 31.07.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **கிஷ்ட்டா ரெட்டி** Father's Name : Narayanasamy Reddy

Address : 26, Vinayagar Koil Street, Panavattam Padi Village,
Nemili Taluk, Ranipet Distrit.

Age :73

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. யார், யார் மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், பாபு மற்றும் ரமேஷ் என்பவர்கள் மீது தாக்கல் செய்துள்ளேன். வேறு யார் மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், வேறு யாரும் இல்லை. என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனக்கு சொந்தமான நிலத்தை மேற்படி இருவரும் அவர்களுக்கு சொந்தம் என்று செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொண்டுள்ளார்கள், அதனால் அந்த பத்திரத்தை ரத்து செய்ய வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

2. தாவா சொத்தை எத்தனை அயிட்டமாக சொல்லியுள்ளேன் என்றால், அது பற்றி சரியாக தெரியவில்லை. எனக்கும், 1, 2 பிரதிவாதிகளுக்கும் எத்தனை செண்ட் சொத்து சம்மந்தமாக தகராறு உள்ளது என்றால், 15 செண்ட் சம்மந்தமாக

தகராறு உள்ளது. அதை தான் தாவாவில் சொல்லியுள்ளேனா என்றால், ஆமாம். அந்த 15 செண்ட் சொத்து தற்போது எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால், 502/1–ல் உள்ளது. சர்வே எண் 502/1–ன் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால், சர்வே எண் 502–ன் மொத்த விஸ்தீரணம் 48 செண்ட் ஆகும்.

1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

**ENDING TIME:** 11.15. A.M.

**(Sd/-. G. Yuvaraj)**

**Special Subordinate Judge,**
**Special Sub Court for L.A.O.P. Cases,**
**Arakkonam.**